முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No. 170 / 2013

11.04.2019

வா.சா.1 : பெயர் : பாலகுமார், த/பெ. தர்மலிங்கம்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

வா.சா.ஆ.4 ல் என்னென்ன ஆவணங்கள் தகவல் உரிமை சட்டத்தில் கொடுக்கப்பட்டது என்ற விவரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆனது பல ஆவணங்களின் தொகுப்பு என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 ல் பக்கம் எண்.310 லிருந்து 316 வரை உள்ள ஆவணங்களில் அனைத்திலும் எந்தவித கையொப்பம் மற்றும் முத்திரை ஆகியவை இல்லை என்று சொன்னால் சரிதான். மேலும் பக்கம் எண்.322 லிருந்து 327 வரை உள்ள ஆவணங்களில் 1ம் பிரதிவாதி நிறுவன டிரஸ்டுக்குண்டான கையொப்பமோ, முத்திரையோ இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 லில் 310 லிருந்து 316 வரையிலும், 322 லிருந்து 327 வரையிலுள்ள ஆவணங்கள் அனைத்தும் டிரஸ்டால் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். பொதுவாக, தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் பெறப்படும் ஆவணங்களில் அவை எத்தனை பக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளவை என்று சொல்லப்படும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 ல் முதல் பக்கத்தில் மேற்படி விவரங்கள் சொல்லப்படவில்லை, ஆனால் கடைசி பக்கத்தில் எத்தனை பக்கங்கள் என்று கூறி, அதில் சான்றொப்பமிடப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி நிறுவனம் வருடாவருடம் ஆடிட் செய்யப்படும் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் வா.சா.ஆ.4 ல் சொல்லப்பட்டுள்ளது. 1வது பிரதிவாதி நிறுவனத்தை ஆடிட் செய்த ஆடிட்டர் சரியாக கணக்குகளை ஆடிட் செய்யவில்லை என்பது என்னுடைய கருத்து ஆகும். எதன் அடிப்படையில் நான் இவ்வாறு சொல்கிறேன் என்றால் 1ம் பிரதிவாதியானவர் நிலம் வாங்கியதாக சொல்லியுள்ளார், ஆனால் அதை

ஆடிட் அறிக்கையில் காட்டப்படவில்லை. 31.3.2006 ன்படி 1 ம் பிரதிவாதி டிரஸ்டானது கார்பஸ் பண்டு ரூ.30,28,625/- உள்ளதாக காட்டப்பட்டுள்ளது. இந்த கார்பஸ் பண்டானது 1 ம் பிரதிவாதி டிரஸ்டுக்கு எப்படி வந்தது என்பது எனக்கு தெரியும். 4 ம் பிரதிவாதியும், 2 ம் பிரதிவாதியும் மேற்படி தொகையை வெளியில் வாங்கி, அது டெபாசிட் செய்த விவரம் தெரியும். அந்த தொகையை அவர்கள் கடனாக பெற்றார்களா அல்லது நன்கொடையாக பெற்றார்களா என்பது எனக்கு தெரியாது. 31.3.2009 ன்படி கார்பஸ் பண்டானது ரூ.59,89,880/-ஆக உயர்ந்துள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கார்பஸ் பண்டு என்று சொல்வது 1 ம் பிரதிவாதிக்கு சொந்தமான கையிருப்பு பணம் என்று சொன்னால் சரிதான். இந்த கார்பஸ் பண்டு தொகையான ரூ.59,89,880/- ஆனது 1 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்தவகையில் உயர்ந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி, 1 ம் பிரதிவாதி டிரஸ்டுக்காக எவ்வளவு தொகை நன்கொடையாக வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதி அவருடைய சொந்த பணத்தை 1 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு கார்பஸ் பண்டாக கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு வெளியில் நன்கொடையாக 2 மற்றும் 4 பிரதிவாதிகள் பெற்றார்கள் என்பதை காட்டுவதற்காக ரசீதுகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. 31.3.2012 ன்படி உள்ள கார்பஸ் பண்டான ரூ.59,89,880/- ஆக காட்டப்பட்டுள்ளது. இமயம் டிரஸ்டானது தேனா வங்கியில் கடன் பெற்றுள்ளார். 2006 ல் ரூ.68 லட்சமும், 2008 ல் ரூ.3 ½ கோடியும், மற்றும் 2011 ல் ரூ.9 ¾ கோடியும், 1 ம் பிரதிவாதி தேனா வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியும். அந்த கடனானது சொத்துக்களின் அடிப்படையில் வங்கி, 1 ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வங்கிக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்களானது 2, 3, 6 மற்றும் 8 பிரதிவாதிகளுக்குண்டான சொத்துக்களாகும். 2 ம் பிரதிவாதிக்கு சென்னை, ஜார்ஜ் டவுனில் ஒரு வணிக வளாகம் உள்ளது என்றால் மேலே வீடும், கீழே வணிக வளாகம் உள்ளது. மல்லிகாவிற்கு வடக்கு வெளி கிராமம் கொத்தப்பட்டியில் 48 சென்ட் நிலம் உள்ளது. சின்ன சேலம்பட்டியில் 2 ம் பிரதிவாதி பெரியண்ணனுக்கு 5.3 ஏக்கர் நிலம்

உள்ளது. இந்த மூன்று சொத்துக்களை கூடுதலாக கொடுத்துதான் கடன் பெறப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி டிரஸ்ட் ஏற்படுவதற்கு முன்பாக அவர் லாரி ரெகுலர் சர்வீஸ் கம்பெனி வைத்து நடத்தி வந்தார். துறையூரில் 3ம் பிரதிவாதி ஆண்டியினுடைய கட்டிடத்திலுள்ள பைனான்சில் 2ம் பிரதிவாதியை பார்த்துள்ளேன். டிரஸ்ட் ஆரம்பிப்பதற்கு முன்பாக 2ம் பிரதிவாதி பெரியண்ணன் பைனான்சிஸ் வைத்திருந்தாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தேனா வங்கியில் வாங்கிய கடன் தொகையில் தற்போது எவ்வளவு நிலுவையில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. அதில் பெரும்பகுதியான கடனை திருப்பி செலுத்தப்பட்டுவிட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின்கீழ் 10 கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. இமயம் டிரஸ்டானது எவ்வளவு சதுரடி பரப்பளவு கொண்டது என்பது எனக்கு தெரியாது. ஆனால் 13 கட்டிடங்கள் உள்ளது. அந்த கட்டிடங்கள் சுமார் 4½ லட்சம் சதுரடியில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்தது 2005ம் வருடமாகும். 1ம் பிரதிவாதியின் டிரஸ்ட் போர்டு கூட்டத்திற்கு என்னை சிறப்பு அழைப்பாளர்களாக எப்போதாவது என்னை அழைத்துள்ளார்களா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி பெயரில் ஜீவன் கேட்டரிங் என்ற நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் அந்த நிறுவனத்திற்கு பினாமியாக கூட இருக்கலாம். ஜீவன் கேட்டரிங் நிறுவனத்தை 4ம் பிரதிவாதி நடத்தி வருகிறாரா என்றால் இருக்கலாம் என்று கூறிவிட்டு, பின்னிட்டு தெரியாது என்று கூறுகிறார். ஜீவன் கேட்டரிங் தற்போது இயங்கி வருகிறதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

(1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)